# மெட்ரோ நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

**சென்னை, பிப். 24–** மெட்ரோ ரயில் நிலையங்களில், இலவச மருத்துவ முகாம் இன்று துவங்குகிறது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், அப்பல்லோ மருத்துவமனையுடன் இணைந்து, இலவச மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறது.

அந்த வகையில், வண்ணாரப்பேட்டை, சென்ட்ரல், சைதாப்பேட்டை, ஆலந்துார், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழநி,



அண்ணா நகர் உள்ளிட்ட, 12 மெட்ரோ ரயில் நிலையங்களில், இன்று முதல், 28ம் தேதி வரை, காலை, 8:00 மணி முதல் மதியம், 12:00 மணி வரையும்; மாலை, 4:00 மணி முதல் இரவு, 7:00 மணி வரையும், இலவச மருத்துவ முகாம் நடக்கிறது.

இதில், மெட்ரோ ரயில் பயணியர் பங்கேற்று பயனடைய வேண்டுமென, மெட்ரோ ரயில் நிர்வாகத்தினர் தெரிவித்து உள்ளனர்.